


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.5.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நான்காண்டு சாதனை விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.5.2025) திருவல்லிக்கேணி டாக்டர் பெசன்ட் சாலையில் ரூ.2.04 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி மையக் கட்டடத்தினை திறந்து வைத்து பெண்களுக்கு தையல் பயிற்சி, துணிகளில் கலைத்திறன் பயிற்சிகள் அளிக்கப்படுவதை பார்வையிட்டார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி கனிமொழி என்.வி.என்.சோமு, துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெயச்சந்திர பானு ரெட்டி, துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, கே.ஜெ.பிரவீன்குமார் மற்றும் அலுவலர்கள், இளைஞர்கள், பெண்கள் கலந்து கொண்டனர்.

## கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி

# வீடுவீடாக - திண்ணைதோறும் சென்று பரப்புரை செய்யுங்கள்!

## கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, மே 9 -**

**சென்னை அண்ணா அறிவாலயத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுக் கட்சியினர் 3000 பேர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் முன்னிலையில் நேற்று முன்தினம் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்தவர்களை வரவேற்று கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்று கையில் "கழக அரசின் சாதனைகளை விளக்கி வீடு வீடாக திண்ணை தோறும் சென்று பரப்புரை செய்யுங்கள்" என்று குறிப்பிட்டார்.**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.5.2025 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மயிலாடுதுறை மாவட்டத்தைச் சார்ந்த 3,000 மாற்றுக்கட்சியினர் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்ட விழாவில், உரையாற்றினார். இந்நிகழ்வின்போது, கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா முருகன், துணைச் செயலாளர் செல்வமணி, அவைத் தலைவர் சீனிவாசன் மற்றும் தலைமைக் கழக நிருவாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரை வருமாறு: -

நானும் டெல்டாகாரன்தான்; மண்ணின் மைந்தன்!

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இன்றைக்கு இணைந்திருக்கும் உங்களையெல்லாம் நம்முடைய மாவட்டக் கழகத்தின் செயலாளர் முறையாக வரவேற்றிருந்தாலும், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்னும் பெருமையோடு சொல்ல வேண்டும் என்று சொன்னால், தலைவர் கலைஞர் அவர்களின் சார்பில் மீண்டும் ஒருமுறை வருக வருக என்று வரவேற்கிறேன்.

**தி.மு.கழகம் ஆட்சிக்காக தொடங்கப்பட்டதல்ல!**

நம்முடைய நண்பர் முனைவர் தங்கபாண்டியன் அவர்கள் இங்கு பேசுகிறபோது, "எவ்வளவு ஆண்டு காலத்தை நான் வீணடித்துவிட்டேன். இன்றைக்கு நான் அந்த இயக்கத்தில் இருந்து விலகி, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர வந்திருக்கிறேன்" என்று அழுத்தம் திருத்தமாக, அதற்கான காரணங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி, பல ஆண்டு காலமாக தன்னுடைய அரசியல் வாழ்க்கையை வீணடித்து விட்டேனே என்று ஏக்கத்தோடு பேசினார். அவருடைய தந்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிமட்ட தொண்டராக இருக்கிறார்; ஆரம்ப காலத்தில் இருந்து இயக்கத்தில் தொண்டராக இருக்கிறார்; அவரோடு நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுகிற போது, அவர் அழுத நிலையை, இங்கே உணர்ச்சியோடு பேசினார். எனவே, இப்போதே நான் தி.மு.க.விற்கு ஒரு நல்ல பேச்சாளர் கிடைத்திருக்கிறார் என்று சொல்லுவேன். இதுபோல பல பேர் இங்கு இருக்கிறீர்கள். அதுவும் எனக்கு தெரியும்.

உங்களை நாங்கள் இன்றைக்கு அரவணைத்து, இந்த இயக்கத்தில் சேர்த்திருக்கிறோம் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மக்களுக்கான இயக்கம். ஆட்சிதான் நம்முடைய லட்சியம் என்ற உணர்வோடுதொடங்கப்படவில்லை.

1949இல் இந்த இயக்கத்தை, பேரறிஞர் அண்ணா அவர்கள் கொட்டும் மழையில் வடசென்னையில் இருக்கும் ராபின்சன் பூங்காவில் தொடங்கி வைத்தபோது, அவர் சொன்னார், "இந்த இயக்கம் தொடங்கப்படுவது, ஆட்சிக்காக பதவிக்காக அல்ல. ஏழை - எளியவர்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அடித்தளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்காக, நெசவாளத் தோழர்களுக்காக, தொழிலாள நண்பர்களுக்காக, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்காக இந்தக் கழகம் தொடங்கப்படுகிறது" என்று அறைகூவல் விடுத்து, இந்த இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

இப்போது நம்முடைய கழக ஆட்சி ஆறாவது முறையாகப் பொறுப்பேற்று நாளைய தினம் 4ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது. 5ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கப் போகிறோம். இதன் பிறகு நடைபெறவுள்ள அடுத்த தேர்தலிலும் வெற்றி பெற்று, ஏழாவது முறையும் நாம்தான் ஆட்சிக்கு வரப் போகிறோம். அதில் சந்தேகம் இல்லை.

நான் ஏதோ ஆணவத்தில் சொல்கிறேன்என்று நினைத்துவிடாதீர்கள். ஆட்சிக்கு வந்தே தீர வேண்டும் என்று, அந்த பதவி சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக சொல்லுகிறேன் என்று நினைத்து விடாதீர்கள். அதைத்தான், அண்ணா அவர்கள் இந்தக் கட்சியை தொடங்கிய போதே, 'கழகம் ஆட்சிக்காக அல்ல; நாட்டு மக்களுக்காக" என்று சொன்னார்.

75 ஆண்டு கால திராவிட முன்னேற்றக் கழகப் பேரியக்கத்தில் இன்றைக்கு நீங்கள் எல்லாம் வந்து சேர்ந்திருக்கிறீர்கள் என்றால், இந்தியாவில் முதல் முதலில் ஆட்சி அமைத்த மாநில கட்சி நம்முடைய கழகம்தான்; இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டும் கட்சி யார் என்று கேட்டால், அதுவும் தி.மு.க.தான். இந்தியாவில் இருக்கும் முதலமைச்சர்களுக்கு எல்லாம் யார் வழி காட்டுகிறார்கள் என்றால், அதுவும் தமிழ்நாட்டில் இருக்கும் இந்த ஸ்டாலின்தான்; ஏன், ஒன்றிய அரசிற்கே வழிகாட்டுவது யார் என்று கேட்டால், இந்த மாநிலத்தின் நம்முடைய கழக ஆட்சிதான். அந்த அளவிற்கு இன்றைக்கு பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் தீட்டி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

**கவர்னர் என்ற பொறுப்பு இருக்கும் வரை மரியாதை கொடுக்கிறோம்!**

உங்களுக்குத் தெரியும், நமக்கு ஒரு கவர்னர் வாய்த்திருக்கிறார். நான் அடிக்கடி சொல்வது என்னவென்றால், அவர்தான் தொடர்ந்து இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் நமக்கு நல்லது.

ஆனால், கவர்னர் என்ற பொறுப்பு இருக்கும் வரை, அந்த கவர்னருக்கு மரியாதையை கொடுக்கிறோம்.

இன்று உச்சநீதிமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுத் தந்திருக்கிறது.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்று தேர்தல் நேரத்தில் என்னென்ன உறுதிமொழிகளை வாக்குறுதிகளை சொன்னது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அவற்றில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றி இருக்கிறோம்!

மீதம் இருக்கும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், காலை உணவுத் திட்டம், மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48, கலைஞர் கனவு இல்லம் திட்டம், தோழி விடுதி, அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, கலைஞர் கைவினைத் திட்டம் இது போன்று பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

எனவே, இந்தச் சாதனைகளை எல்லாம் மக்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும். மக்களுக்கு தெரியும். அதை நினைவுபடுத்த வேண்டும். மக்கள் தெளிவாக புரிந்து வைத்திருக்கிறார்கள். அவ்வாறு புரிந்து வைத்திருக்கும் மக்களுக்கு, சில கட்சிகள் சில தலைவர்கள் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழப்பத்தில் இருந்து அவர்களை சரி செய்வதற்கு நீங்கள் எல்லாம் பிரச்சார பீரங்கிகளாக மாற வேண்டும். பிரச்சார பீரங்கிகள் என்று சொன்னால், ஏதோ பேச்சாளராக வர வேண்டும் என்பது மட்டுமல்ல. ஐந்து பேர், ஆறு பேர் ஒரு கிராமத்தில் வீடுவீடாக சென்று திண்ணை பிரச்சாரம் தாய்மார்களிடத்தில் பேசுவது. ஏனென்றால் ஒரு முறைக்கு இரண்டு முறை சென்று பேசி, தி.மு.க. செய்திருக்கும் சாதனைகளை எல்லாம் எடுத்துச் சொல்லுங்கள். ஒரு முறைக்கு இரண்டு முறை சொன்னால் நிச்சயமாக எந்தக் காரணத்தை கொண்டும் அவர்கள் மறக்கமாட்டார்கள். ஏற்கனவே மறக்காத சூழ்நிலையில்தான் இருக்கிறார்கள்.

ஏனென்றால் நாம் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு நடைபெற்றிருக்கும் அனைத்து தேர்தல்களிலும் தி.மு.க.தான் பெரிய வெற்றி பெற்றிருக்கிறது என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். எனவே அந்த வெற்றியை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்கு நீங்கள் எல்லாம் துணை நிற்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் உங்களை அன்போடு கேட்டுக் கொண்டு, இங்கே வருகை தந்து நம்முடைய இயக்கத்தில் சேர்ந்திருக்கும் நம்முடைய நண்பர்களை சகோதரர்களை சகோதரிகளை தோழர்களை உடன்பிறப்புகளை அத்தனை பேரையும் மீண்டும் ஒரு முறை வருக வருக வருக என்று வரவேற்று, என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

> நாம் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு நடைபெற்றிருக்கும் அனைத்து தேர்தல்களிலும் தி.மு.க.தான் பெரிய வெற்றி பெற்றிருக்கிறது என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். எனவே அந்த வெற்றியை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்கு நீங்கள் எல்லாம் துணை நிற்க வேண்டும்.